பிரார்த்தனை நேரம்

# தேவனின் பாதத்தில்



# முழங்கால் யுத்தம்

தேவ ஊழியர் L. ஜோசப்

## முழங்கால் யுத்தம்

# பிரார்த்தனை நேரம்

## (தேவனின் பாதத்தில்)



கர்த்தர் என் விண்ணப்பத்தைக்
கேட்டார்; என் ஜெபத்தை
எற்றுக்கொள்ளுவார் (சங் 6:9)

தேவ ஊழியர். L. ஜோசப்

# உங்களோடு
# சில வரிகள்...

ஜெபத்தைக் கேட்கிறவரே...
(சங் 65:2)

**நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னத திருநாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

தேவகிருபையால் **முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை நேரம் (தேவனின் பாதத்தில்)** என்கிற இந்த சிறிய ஜெபக்கையேட்டை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்! புதிதாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள், வேதனைகள், உபத்திரவங்கள், இழப்புகள், தோல்விகள், கவலைகள், பயங்கள், குழப்பங்கள், கலக்கங்கள், ஏக்கங்கள், பெலவீனங்கள் போன்ற கடினமான சூழ்நிலைகளில், செய்வது அறியாது தவிக்கும் நேரங்களில் தேவனை நோக்கி ஜெபிப்பதற்கென சில மாதிரி ஜெபங்களை இந்த ஜெபக்கையேட்டில் கொடுத்துள்ளோம்!

இந்த ஜெபக்கையேட்டினை பிரத்தியேகமாக தேவனுடைய சமுகத்தில் போராடி ஜெபிப்பதற் கென ஆயத்தப்படுத்தியிருக்கிறோம்! உங்கள் வாழ்வின் இக்கட்டான நேரங்களில் இந்த ஜெபங் களை தேவனிடம் ஏறெடுத்து அவரிடத்திலிருந்து அற்புதங்களையும், அதிசயங்களையும், சமாதானத் தையும், சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும், ஆறு தலையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள் ளலாம்! நீங்கள் உடைந்த உள்ளத்தோடு, கண்ணீ ரோடு, பெருமூச்சோடு, ஏக்கத்தோடு, வாஞ்சையோடு உங்கள் இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும்போது, தேவன் உங்கள் பிரார்த்தனையைக் கேட்டு நிச்சய மாக உங்களுக்கு பதிலளிப்பார். உங்களை ஆசீர்வதிப் பார். அல்லேலூயா. ஆமென். தேவநாமம் மகிமைப் படுவதாக.

அன்பும் ஜெபமும்

L. ஜோசப்

ஜெபத்தை ஏற்றுக்கொள்பவரே...

*(சங் 65:2)*

# இக்கையேட்டின் உள்ளே...


1. தேவனை ஸ்தோத்திரிப்போம் ... 06

2. இயேசுகிறிஸ்து கற்பித்த ஜெபம் ... 08

3. விசுவாச அறிக்கை - 1 ... 09

4. விசுவாச அறிக்கை - 2 ... 10

5. ஜெபத்தின்மேன்மை ... 12

6. தியானப்பகுதி ... 14

7. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் ... 16

8. ஜெபத்திற்கான தலைப்புகள்

1. இரட்சிப்பிற்காக... ... 18

2. பரிசுத்தமாக வாழ ... 20

3. தேவசித்தம் அறிய ... 22

4. பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ... 24

5. தேர்வு எழுதுவோருக்காக... ... 26

6. வயது முதிர்ந்தோருக்காக... ... 28

7. திருமணத்திற்காக... ... 30

8. சுகப் பிரசவத்திற்காக... ... 32

9. பிரச்சினைகள் நீங்க... ... 34

10. தோல்வி எண்ணங்கள் மாற... ... 36

11. பெலவீனங்கள் நீங்க... ... 38

12. சோர்வுகள் நீங்க... ... 40

13. துக்கம் மாற... ... 42

14. உபத்திரவங்கள் மாற... ... 44

15. வறுமை சூழ்நிலை மாற... ... 46

16. அடிமைத்தனம் நீங்க... ... 48

**9. பிரார்த்தனை கேட்கும் இயேசு ... 50**

**10. வாக்குத்தத்தங்கள் ... 54**

# தேவனை ஸ்தோத்திரிப்போம்

ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் (சங் 50:23)

★ வெளிச்சமும், இரட்சிப்புமானவரே!

★ எனக்காக சிலுவை சுமந்தவரே!

★ ஒரே தேவனாயிருக்கிற கர்த்தரே!

★ சகலத்தையும் புதிதாக்குகிறவரே!

★ சத்திய வசனத்தினால் ஜநிப்பித்தவரே!

★ சத்துருக்களுக்கு பதிலளிக்கிறவரே!

★ சதாகாலமும் உயிரோடிருக்கிறவரே!

★ சர்வலோக நியாயாதிபதியே!

★ காலைதோறும் விசாரிக்கிறவரே!

★ நிமிஷந்தோறும் சோதித்தறிகிறவரே!

★ மன்னுயிரைக் காப்பவரே!

★ உத்தமர்களை வெறுக்காதவரே!

★ நீதியின் பலனை அருளிச்செய்பவரே!

★ இடி முழக்கமாய் சத்தமிடுகிறவரே!

★ ஜீவத்தண்ணீர் ஊற்றானவரே!

★ சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரே!

★ சீர்கேடுகளைக் குணமாக்குகிறவரே!

★ யாக்கோபின் பங்காயிருக்கிறவரே!

★ நீதியின் வாசஸ்தலமானவரே!

★ பரிசுத்த பர்வதமானவரே!

★ மீட்பரும், வல்லவருமானவரே!

★ ஜீவனுடைய ஆவியானவரே!

★ அக்கின மயமான நிறமுடையவரே!

★ மகிமையின் சாயலையுடையவரே!

★ எங்களைக் குணமாக்குகிறவரே!

★ ஜாதிகளுக்கு ஒளியானவரே!

★ பூமியின் ரூபத்தைப் புதிதாக்குகிறவரே!

**இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக (சங் 113:2)**

# இயேசுகிறிஸ்து கற்பித்த ஜெபம்

**மத்தேயு 6:9-13**

9 பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

10 உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

11 எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

12 எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக் கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

13 எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என் றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

# விசுவாச அறிக்கை - 1

## சங்கீதம் 121

1 எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

3 உன் காலைத் தள்ளாடவொட்டர்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

4 இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

5 கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

6 பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

7 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8 கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

# விசுவாச அறிக்கை - 2

**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவா 5:4)**

- ★ நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் (சங் 23:4)
- ★ இயேசுவை நம்பியிருக்கிறேன். நான் பயப்படேன் (சங் 56:11)
- ★ நான் என்றென்றைக்கும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பேன் (ஏசா 45:17)
- ★ எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் (ஏசா 54:17)
- ★ என்னைத் தப்புவிப்பதற்கு இயேசுகிறிஸ்து என்னோடிருக்கிறார் (எரே 15:20)
- ★ நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார் (சங் 34:4)
- ★ ஒரு வழியாய் எனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் எனக்கு முன்பாக ஓடிப்போவார்கள் (உபா 28:7)

★ எவர்கள் எனக்கு விரோதமாய்க் கூடுகிறார் களோ, அவர்கள் என் பட்சத்தில் வருவார்கள் (ஏசா 54:15)

★ நான் விசுவாசித்திருக்கிற இயேசுகிறிஸ்து என்னைக் காத்துக்கொள்ள வல்லவராயிருக் கிறார் (2தீமோ 1:12)

★ உலகத்திலிருக்கிறவனிலும் என்னிலிருக்கிற இயேசுகிறிஸ்து பெரியவர்; ஆதலால், பிரச்ச னைகள் என்னை மேற்கொள்ளாது (1யோவா 4:4)

★ நான் தேவனுடைய கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக் கிறபடியால் பாவம் என்னை மேற்கொள்ளாது (ரோம 6:14)

★ சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தனை என் கால்களின்கீழே நசுக்கிப் போடுவார் (ரோம 16:20)

★ என் சரீரமானது நான் இயேசுவாலே பெற்றும், என்னில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியி னுடைய ஆலயமாயிருக்கிறது (1கொரி 6:19)

**விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்**
**(மாற் 9:23)**

# ஜெபத்தின் மேன்மை

**ஜெபத்தைக் கேட்கிறவரே (சங் 65:2)**

★ கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் (மத் 7:7)

★ கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளு கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத் 7:8)

★ நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார் (யோவா 16:23)

★ கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் பெற்றுக் கொள்வீர்கள் (யோவா 16: 24)

★ உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்

தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் (மத் 18:19)

★ நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் (மத் 21:22)

★ நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் (மாற் 11:24)

★ நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன் (யோவா 14:13)

**ஜெபத்தைத் தள்ளாதவரே (சங் 66:20)**

**விசுவாசமின்றி ஜெபிப்பது வெற்றுத் துப்பாக்கியால் சுடுவது போன்றது; வெறும் சத்தம் எழுப்புமேயொழிய காரியம் சாதிக்காது**

# தியானப் பகுதி

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை பார்க்கும் படிக்கு என் கண்களைத்திறந்தருளும்
(சங் 119:18)

## சங்கீதம் 138

1. உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

2. உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப் படுத்தியிருக்கிறீர்.

3. நான் கூப்பிட்டநாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்.

4. கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்

போது உம்மைத் துதிப்பார்கள்.

5. கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள்.

6. கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ள வனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையான வனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

7. நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.

8. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப் பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது.

**நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும் (சங் 104:34)**

**நாம் நமது பாரங்களை தேவனுடைய பாதத்தில் வைக்கும்போது, அவர் தமது சமாதானத்தை நம்முடைய இருதயத்தில் வைக்கிறார்.**

# இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள்

**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோவா 6:63)**

★ நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவா 11:40)

★ என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை (யோவா 6:37)

★ உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவா 16:20)

★ என்னைக் காணாதிருந்தும் விசுவாசிக்கிற வர்கள் பாக்கியவான்கள் (யோவா 20:29)

★ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத் 28:20)

★ சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவா 14:27)

★ நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக் கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவா 11:25)

★ தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மை யோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் (யோவா 4:24)

★ வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28)

★ மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத் 5:16)

★ ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசு வாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடை யான் (யோவா 6:35)

**தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் (லூக் 11:28)**

# 1. இரட்சிப்பிற்காக ஜெபம்

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்,
சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர்
சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ 2:4)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, என்னை உமது கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்க வந்த தேவ குமாரனே, என்னைப் பாவத்திலிருந்து விடுதலையாக்கும்படியாக ஜெபிக்கிறேன்! என் பாவங்களுக்காக சிலுவையில் ஜீவனையே தந்த இயேசுவே, பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் எனக்கு விடுதலை தந்தருளும்! இயேசுவே, நான் உமக்கு விரோதமாகச் செய்த என்னுடைய எல்லாப் பாவங்களையும் உமது சமுகத்தில் அறிக்கையிடுகிறேன்! ஆண்டவரே, நான் அறிந்தும், அறியாமலும் செய்த என்னுடைய எல்லாப் பாவங்களையும், குற்றங்களையும் தயவாய் மன்னித்தருளும்!

ஒழுங்கில்லாத எல்லாக் காரியங்களையும் ஒழுங்குபடுத்தும்! இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சத்திகரிக்கும் என்ற உம்முடைய வார்த்தையின்படி உமது இரத்தத்தால் என்னைப் பாவமற கழுவி சுத்திகரியும்! இயேசுவே, உமது பிள்ளையாக என்னை சேர்த்துக்கொள்ளும்! இரட்சிப்பின் சந்தோஷத்தினால் என்னை நிரப்பி உமது சமாதானத்தை அருளிச்செய்யும்! இன்றி லிருந்து நான் புதிய வாழ்க்கை வாழ எனக்கு உதவி செய்தருளும்! பாவம் இல்லாத பரிசுத்த வாழ்க்கை வாழ எனக்குக் கிருபை செய்தருளும்!

இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு நான் செய்த எல்லாப் பாவங்களிலிருந்து என்னை இரட்சித்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!!**

இரட்சிப்பு கர்த்தருடையது
(சங் 3:8)

# ௨. பரிசுத்தமாய் வாழ ஜெபம்

*நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்*
*(1தீமோ ௨:4)*

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

ஆண்டவரே, உம்முடைய பரிசுத்தமுள்ள கரங்களில் என்னை ஒப்புவித்து ஜெபிக்கிறேன். கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருங்கள் என்று சொன்னீரே, பரிசுத்த மாய் வாழ என்னை அர்ப்பணிக்கிறேன்! எனது வாழ்க்கையில் காணப்படும் உமக்குப் பிரியமில் லாத, அசுத்தமான பாவப் பழக்கங்களிலிருந்து எனக்கு பரிபூரண விடுதலையைத் தந்தருளும்! பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவன் இரக்கம் பெறுவான் என்ற உம்முடைய வார்த் தையின்படி, நான் உமக்கு விரோதமாய் செய்த என்னுடைய எல்லாப் பாவங்களையும் உம்முடைய சமுகத்தில் அறிக்கையிடுகிறேன்.

இயேசுவே, என்மேல் கிருபையாயிரும்! உம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் என் பாவங்களைக் கழுவியருளும்! பரிசுத்தத்தை விரும்புகிற தெய்வமே, எனது வாழ்நாளெல்லாம் பரிசுத்தமாக உம்மைப் போல வாழ எனக்கு உதவி செய்தருளும்! பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள எனக்குக் கிருபை தாரும்! பெலவீனங்களில் உதவி செய்கிறவரே, பாவ சோதனைகளோ, பாவ போராட்டங்களோ என்னை மேற்கொள்ளாதபடி உமது பரிசுத்த வல்லமையால் நிரப்பி ஒவ்வொருநாளும் பரிசுத்தமாக வாழ எனக்கு கிருபை செய்தருளும்! என் பரிசுத்தத்திற்கு விரோதமாகப் போராடும் சத்துருவை முறிக்கிறேன் இயேசுவின் நாமத்தில்.

கர்த்தராகிய இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு பரிசுத்தமாய் வாழ கிருபை செய்வதற்காக உமக்கு நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே! ஆமென்.**

*பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்*
*(வெளி 22:11)*

# 3. பரிசுத்தமாய் வாழ ஜெபம்

*தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலி 2:13)*

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, உம்முடைய மகிமையுள்ள கரங்களில் என்னை ஒப்புவிக்கிறேன்! ஆண்டவரே, எனது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் உமது சித்தம் மாத்திரமே நிறைவேறும்படி ஜெபிக்கிறேன்! இயேசுவே, நீர் இவ்வுலகில் மாம்சத்தில் வாழ்ந்தபோது, பிதாவின் சித்தத்தை அறிந்து அதின்படியே செயல்பட்டதைப்போல, நானும் எனது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் உம் சித்தத்தை அறிந்து அதை மாத்திரமே நிறைவேற்ற கிருபை தாரும்! என் சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று சொன்னீரே, உமக்குச் சித்தமில்லாத எந்தவொரு காரியத்திலும் நான் ஈடுபடாதபடிக்கு என்னைத் தடுத்தாட் கொள்ளும்!

பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்று சொன்னீரே, என்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நாளிலும், குழப்பமான சூழ்நிலைகளிலும், கடினமான தருணங்களிலும், முடிவெடுக்கும் ஒவ்வொரு காரியத்திலும் நீர் என்னோடு கூட இருந்து உம்முடைய சித்தத்தை தயவாய் வெளிப்படுத்தும்! இயேசுவே, உமது சித்தத்தை அறிகிற அறிவினால் என்னை நிரப்பும்! உமது சித்தத்தின்படி செயல்பட ஞானத்தினால் என்னை நிரப்பும்! இயேசுவே, உம்மை விட்டு வழிவிலகிச் செல்லாதபடி, உமது சித்தத்தின்படி நடந்தி என்னை ஆசீர்வதியும்! ஆண்டவரே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது சித்தத்தின்படி என்னை வழிநடத்துவதற்காக உமக்கு நன்றி.

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

*நீங்கள் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபே 5:17)*

# 4. பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக...

*சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் (மத் 19:14)*

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, சிறுபிள்ளையாகிய என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! சிறு பிள்ளைகளை அதிகம் நேசிக்கிறவரே, என்மேல் கிருபையாயிரும்! இயேசுவே, என் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக உமது சமுகத்தில் ஜெபிக்கிறேன்! ஆண்டவரே, உம்மை அதிகமாய் நேசிக்கவும், உம் மீது அன்பு வைக்கவும், உமக்குப் பயந்து உமக்குப் கீழ்ப்படியவும் எனக்கு கிருபை தாரும்! உம்மை அறிகிற அறிவில் வளர்ந்து பெருக உதவி செய்யும்! இயேசுவே, எனது வாழ்வை உமது சித்தத்தின் படியே என்னைக் கரம்பிடித்து நடத்தும்! ஆண்டவரே, ஒவ்வொருநாளும் உம்முடைய வேதத்தை வாசிக்கவும், தியானிக்கவும், கீழ்ப்படியவும், அதின்படி நடக்கவும் எனக்கு உதவி செய்தருளும்!

ஆண்டவரே, பரிசுத்தமாய் வாழ பெலன் தாரும்! எப்பொழுதும் உம்மைத் துதிக்கவும், ஆராதிக்கவும், ஜெபிக்கவும் கிருபை செய்தருளும்! சாமுவேலைப்போல உமது சத்தத்தைக் கேட்க என் செவிகளைத் திறந்தருளும்! எலிசாவைப் போல உம்மைத் தரிசிக்க என் ஆவிக்குரிய கண்களைத் திறந்தருளும்! சாலெமோனைப் போல உமது ஞானத்தினால் என்னை நிரப்பும்! இயேசுவே, உம்மைப் போல் தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்ந்து பெருக உதவி செய்தருளும்! என்னை உம்முடைய அபிஷேகத்தினால் அளவில்லாமல் நிரப்பும்! ஒவ்வொருநாளும் உமது கரம் என்னோடு கூட இருந்து என்னை வழிநடத்தி ஆசீர்வதிக்கட்டும்! இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு என்னை ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து பெருகும்படி கிருபை செய்வதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

*உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால்*
*போதிக்கப்பட்டிருப்பார்கள் (ஏசா 54:13)*

# 5. தேர்வு எழுதுவோருக்காக...

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்... தேவனிடத்தில் கேட்கக்கடவன் (யாக் 1:5)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

ஆண்டவரே, இந்த நாளிலும் தேர்வு எழுதவிருக்கும் என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! இயேசுவே, நீர் எனக்குத் தந்த நல்ல .................................. பள்ளி/கல்லூரி/மருத்துவ/தொழிற்கல்வி) படிப்பிற்காக உமக்கு நன்றி! ஆண்டவரே, நல்ல முறையில் நான் தேர்வு எழுதும்படியாக உமது சமுகத்தை நோக்கிப் பார்க்கிறேன்! உமது விலையேறப்பெற்ற ஞானத்தையும், அறிவையும், புத்தியையும் எனக்குத் தந்தருளும்! ஆண்டவரே, நான் படித்த ஒவ்வொரு பாடத்தையும் மனதில் பதித்து வைத்து தேர்வு எழுதுவதற்கான ஞாபகசக்தியை எனக்குத் தந்தருளும்!

இயேசுவே, தானியேலைப் போல எனக்கு ஞானத்தையும், அறிவையும், புத்தியையும் தாரும்! ஆண்டவரே, தேர்வு எழுதும் நேரத்தில் நீர் என்னோடு இருந்து சிறந்த முறையில் தேர்வு எழுதி முடிக்க உதவி செய்யும்! பெலன் தருகிற இயேசுவே, தேர்வு நேரத்தில் எந்தவித பயமோ, கலக்கமோ, நடுக்கமோ, தடுமாற்றமோ, பெலவீனமோ எனக்கு வராதபடிக்கு உமது பெலத்தினால் என்னை இடை கட்டும்! தேர்வு எழுதுகிற பாடத்தில் அதிக மதிப் பெண்களைப் பெற்று உமது நாமத்தை மகிமைப் படுத்த எனக்குக் கிருபை செய்தருளும்! இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு எல்லா பாடத்திலும் அதிக மதிப்பெண்கள் எடுத்து தேர்வில் வெற்றி பெறச் செய்வதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

**வானத்தையும், பூமியையும் உண்டாக்கின**

**கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்**

**(சங் 121:2)**

# 6. வயது முதிர்ந்தோருக்காக...

அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, பஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள் (சங் 92:15)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, வயது முதிர்ந்த என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, இத்தனை ஆண்டுகளாக உமது கிருபை யினால் என்னைத் தாங்கி சுகத்தோடும், பெலத் தோடும், ஆரோக்கியத்தோடும் நடத்தி ஆசீர்வதித் தீரே உமக்கு நன்றி! இயேசுவே, என்னையும், என் குடும்பத்தையும் ஆசீர்வதித்தீரே, என் பிள்ளை களின் பிள்ளைகளையும் காணச்செய்தீரே, உமக்கு நன்றி! ஆண்டவரே, இப்பொழுதும் எனக்கு நல்ல சரீர சுகத்தையும், பெலத்தையும் தரும்படி ஜெபிக் கிறேன். என் வியாதிப்படுக்கையை மாற்றியருளும்! என் கண்களில் நல்ல பார்வையைத் தந்தருளும்!

இயேசுவே, பயம், கலக்கம், நடுக்கம் போன்ற வற்றிலிருந்து விடுதலையைத் தந்தருளும்! நல்ல தைரியத்தையும், திட நம்பிக்கையையும் தாரும்! கைவிடாத இயேசுவே, தனிமையில் என் னோடுகூட இருந்து பாதுகாத்தருளும்! துன்ப நேரத்தில் நீரே என்னை ஆறுதல்படுத்தி, என் கண் ணீரைத் துடைத்து, கவலைகளை மாற்றியருளும்! ஆண்டவரே, உம்முடைய கண்களிலும், மனுஷர் கண்களிலும் தயவு கிடைக்கப் பண்ணியருளும்! இயேசுவே, எப்பொழுதும் உமது சமுகத்தை வாஞ் சிக்கவும், ஜெபிக்கவும் கிருபை தந்தருளும்! என்னைப் பெலப்படுத்தி உமது சமாதானத்தினால் நிரப்பும்! இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு என்னை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

*நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்...*

*சமாதானத்தையும் காண்பாய்*

*(சங் 128:6)*

# 7.

# திருமணத்திற்காக...

மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்

(ஆதி 2:18)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! எனது திருமண வாழ்க்கைக்காக உமது சமுகத்தில் பாரத் தோடு ஜெபிக்கிறேன்! இரக்கத்தில் ஐசுவரியமுள்ள வரே, உம்முடைய தெய்வீக சித்தத்தின்படி எனக்கு நல்ல வாழ்க்கைத் துணையை எற்படுத்தித் தரும்படி மன்றாடுகிறேன்! இயேசுவே, உம்மை நேசிக்கிற, உமக்குப் பயந்து நடக்கிற நல்ல குணசாலியான புருஷனை/ஸ்திரீயை எனக்குத் தரும்படி வேண்டு கிறேன்! உமது வசனங்களுக்கு கீழ்ப்படிகிற, உமது சித்தத்தை செய்கிற நல்ல மணமகனை/மணமகளை எனக்குத் தந்தருளும்படி மன்றாடுகிறேன்!

ஏற்ற துணையை அருளும் ஆண்டவரே, உம்மைத் தேடுகிற, உம்மேல் விசுவாசம் வைத்து உமக்குப் பயப்படுகிற, உம் சமுகத்தில் காத்திருக்கிற நல்ல கணவனை/மனைவியை வாழ்க்கைத் துணை யாக எனக்குத் தந்தருளும்! நன்மையான ஈவுகளை அருளும் இயேசுவே, நல்ல துணையை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்து என் வாழ்க்கையில் நன்மை யைக் காணச்செய்யும்! இயேசுவே, உம்முடைய இருதயத்திற்கேற்ற நல்ல துணையை எனக்குத் தந்து, என் திருமண வாழ்க்கையை ஆசீர்வதித்து உயர்த்தும்! ஆண்டவரே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு நல்ல வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தி என்னை ஆசீர்வதிப்பதற்காக ஸ்தோத்திரம்.

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

உன் மனைவி உன் வீட்டோரங்களில்
கனிதரும் திராட்சக்கொடியைப்போல
இருப்பாள் (சங் 128:3)

# 8. சுகப்பிரசவம் நடக்க

பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ... என்று உன் தேவன் சொல்லுகிறார் (ஏசா 66:9)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் என்ற உம்முடைய வார்த்தையின்படி நீர் எனக்கு தந்த நல்ல கர்ப்பத்தின் கனிக்காக உமக்கு நன்றி! இயேசுவே, நீர் தந்த இந்தக் குழந்தையை உம்முடைய சமுகத்தில் அர்ப் பணித்து ஜெபிக்கிறேன்! அற்புதங்களைச் செய்யும் இயேசுவே, இப்பொழுதும் எனது பிரசவத்திற்காக உம்மை நோக்கிப் பார்க்கிறேன்! இயேசுவே, என் மேல் கிருபையாய் மனமிரங்கி அற்புதம் செய்தருளும்!

ஆண்டவரே, எனக்கு அவ்வப்போது ஏற்படும் பிரசவத்தைக் குறித்த பயங்களிலிருந்தும், சோர்வு களிலிருந்தும், பெலவீனங்களிலிருந்தும் பரிபூரண விடுதலையைத் தந்தருளும்! திட நம்பிக்கையையும், மிகுந்த தைரியத்தையும் தந்தருளும்! பிரசவத்தை எதிர்நோக்கியிருக்கிற எனக்கு நல்ல சுகத்தையும், பெலத்தையும், ஆரோக்கியத்தையும் கட்டளையிடும்! தேவனே, உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைக்கட்டும்! பிள்ளையைப் பெறப்பண்ணுகிற வரே, உமது பரிபூரணசித்தத்தின்படி ஏற்ற நேரத்தில் எனக்கு சுகப்பிரசவத்தை கட்டளையிட்டு என்னை ஆசீர்வதித்தருளும்! எனக்காக யாவையும் செய்து முடிக்கும் இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு சுகப்பிரசவத்தின்மூலம் பிள்ளை பெறும்படி அநுக் கிரகம் செய்வதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

*பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார் (ஏசா 66:9)*

# 9. பிரச்சினைகள் நீங்க...

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே, எனது வாழ்க்கையில் காணப்படும் எல்லாப் பிரச்சினைகளுக்காகவும் உம்மை நோக்கிப் பார்க்கிறேன்! இளைப்பாறுதலைத் தரும் இயேசுவே, என்னை நெருக்கும் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் எனக்குப் பரிபூரண விடுதலையைத் தந்தருளும்படி ஜெபிக்கிறேன்! சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மன அமைதியையும் இழந்து தவிக்கும் என்மேல் இரக்கமாயிரும்! கிருபை நிறைந்த இயேசுவே, பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்படும் பலவித பிரச்சினைகளினால் குழம்பித் தவிக்கும் என்னைக் கண்ணோக்கிப் பாரும்!

மனதளவில் உடைந்து காணப்படும் என் உள்ளத்தின் காயங்களையெல்லாம் தொட்டு என்னைக் குணமாக்கும்! இயேசுவே, பிரச்சினைகளைக் கண்டு நான் சோர்ந்துபோகாமல் அவைகளை மேற்கொள்ள எனக்கு ஞானத்தையும், பெலனையும் தந்தருளும். பிரச்சினைகளைத் துணிந்து எதிர்கொள்ள வேண்டிய திடநம்பிக்கையையும், தைரியத்தையும் தந்தருளும்! ஆண்டவரே, எனக்கெதிராய் வரும் எந்த பிரச் சினையையும் நான் பாராதபடிக்கு உம்மையே நோக்கிப் பார்க்க எனக்கு கிருபை தாரும்! ஆண்டவரே, பிரச் சினைகளின் மத்தியில் நீரே என்னை கரம்பிடித்து நடத்தி ஆசீர்வதியும்! இயேசுவே, நீர் என் ஜெபத் தைக் கேட்டு எல்லாப் பிரச்சினைகளையும் மாற்றி என்னை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

உங்கள் இருதயம் கலங்காமலும்,
பயப்படாமலும் இருப்பதாக
(யோவா 14:27)

# 10. தோல்வி எண்ணங்கள் மாற...

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (ரோம 8:37)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, உம்முடைய கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணிக்கிறேன்! ஆண்டவரே, என் தனிப்பட்ட வாழ்க்கையில்/வேலையில்/தொழிலில் எடுக்கிற ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வியையே சந்தித்து விரக்தியில் வாழ்ந்து வரும்என் வாழ்க்கைப் பாதையை தயவாய் மாற்றி யமைத்துத் தரும்படி மன்றாடுகிறேன்! இரக்கம் நிறைந்த இயேசுவே, என் வாழ்க்கை முழுவதும் தோல்வியடைந்த நிலையில் உள்ளம் உடைந்து செய்வதறியாது திகைத்து நிற்கும் என்மேல் கிருபையாய் மனமிரங்கும்!

இயேசுவே, என் உள்ளத்தில் எப்பொழுதும் தோல்வி எண்ணங்கள் ஏற்படுவதையும், எந்த வொரு காரியத்திலும் வெற்றி பெற முடியாதிருப் பதையும் நீர் நன்கு அறிந்திருக்கிறீர். ஜெயத்தைக் கொடுக்கிற தேவனே, தோல்வி நிறைந்த என் வாழ்க்கைப் பாதையை மாற்றி வெற்றியுடன் வாழ எனக்கு உதவி செய்தருளும். என்னில் ஏற்படும் தோல்வி எண்ணங்களை மாற்றியருளும். ஆண்டவரே, என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில்/ வேலையில்/ தொழிலில் என்று எல்லாக் காரியங்களிலும் ஜெயத் தையே தந்து என்னை ஆசீர்வதியும்! உம்முடைய சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும், மகிழ்ச்சி யினாலும் என்னை நிரப்பும்! எனக்குள் தோல்வி எண்ணங்களைக் கொண்டு வருகிற பொல்லாத ஆவியை இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கடிந்து கொள்கிறேன்! ஆண்டவரே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு தோல்வி எண்ணங்களை நீக்கி வெற்றியைத் தருவதற்காக உமக்கு நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

*நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோம 8:37)*

# 11.
# பெலவீனங்கள் மாற...

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு
(பிலி 4:13)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, உமது கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணிக்கிறேன்! இரக்கத்தில் ஐசுவரியமுள்ள ஆண்டவரே, என்னுடைய சரீரத்தில் காணப்படும் வியாதிகள், நோய்கள், வலிகள் போன்ற எல்லா பெலவீனங்களும் என்னை விட்டு நீங்கும்படி கண்ணீரோடு ஜெபிக்கிறேன்! பாவங்களை மன்னிக்கிற இயேசுவே, கடந்த காலங்களில் நான் அறியாமல் செய்த என்னுடைய பாவங்களினால் பெலவீனத்தோடு இருக்கும் என்னை தயவாய் மன்னித்தருளும்! இயேசுவே, உம்முடைய இரத்தத்தினால் என்னை கழுவி என்னைச் சுத்திகரித்து உம் பிள்ளையாய் சேர்த்துக் கொள்ளும்!

பெலனைத் தரும் இயேசுவே, என் சிறுமையைக் கண்ணோக்கிப் பாரும்! என் கண்ணீரைத் துடைத்து, என்னை ஆறுதல்படுத்தும்! என்னைப் பெலப்படுத்தி எனக்குச் சகாயம் செய்தருளும்! இயேசுவே, உள்ளம் உடைந்துபோன என்னை தேற்றி உமது பெலத்தினால் நிரப்பியருளும்! என் பெலவீனங்களை சிலுவையில் சுமந்தவரே, உம்முடைய தழும்புகளுள்ள கரங்களால் என்னைத் தொட்டு குணமாக்கியருளும்! ஆண்டவரே, இனி மேலும் பெலவீனங்கள் என்னைத் தாக்காதபடி உம்முடைய இரத்தத்தினால் என்னை மறைத்து பாதுகாத்தருளும்! என்னை உமது சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் நிரப்பும்! என் சரீரத்தில் பெலவீனங்களை ஏற்படுத்துகிற சாத்தானின் கிரியைகளை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்கிறேன்! என் சரீரம் முழுவதையும் உமது பெலத்தினால் நிரப்பி எனக்கு சர்வாங்க சுகத்தைத் தந்து ஆசீர்வதியும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

***என் கிருபை உனக்குப் போதும்;***
***பலவீனத்திலே என் பலம் பூரணமாய்***
***விளங்கும் (2கொரி 12:9)***

# 12
# சோர்வுகள் நீங்க...

**சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார் (ஏசா 40:29)**

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்.**

இயேசுவே, உம்முடைய இரக்கமுள்ள கரங்களில் என்னை ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே, என்னுடைய வாழ்க்கையில் குடும்பத்தினர்களால், உறவினர்களால், நண்பர்களால் ஏற்பட்ட பிரச்சினை, போராட்டங்கள், உபத்திரவங்கள், பாடுகள், வேதனைகள், சோதனைகள், துயரங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள், கண்ணீர்கள், கலக்கங்கள் என பல்வேறு சூழ்நிலைகளால் மிகவும் சோர்ந்துபோய் கவலையோடு காணப்படும் என்னை கண்ணோக்கிப் பாரும்! இயேசுவே, என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்தருளும்! எல்லா சோர்வுகளையும் நீக்கியருளும்! ஒருவரும் தேற்றுவாரின்றி இருக்கும் என்னை ஆறுதல்படுத்தியருளும்!

எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் என்னை நீர் உம்மிடமாகச் சேர்த்துக் கொள்ளும்! இயேசுவே, எனக்குள் ஏற்பட்டுள்ள எல்லா மனக்காயங்களையும் உமது கரத்தினால் தொட்டு ஆற்றியருளும்! சோர்வுகளை நீக்கும் இயேசுவே, என் வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கங்களால் நான் சோர்ந்து போகாதபடிக்கு என்னை உமது கிருபையினால் சூழ்ந்துகொள்ளும்! என்னைக் கரம் பிடித்து நடத்தி ஆசீர்வதித்து மேன் மைப்படுத்தும்! சோர்வுகளைக் கொண்டு வந்து என்னைச் சோர்வுறச் செய்யும் அசுத்தாவிகளை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்கிறேன்! இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு சோர்வு களை நீக்கி புதுபெலன் தந்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி 4:13)**

# 13
# துக்கம் மாற...

கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்;
உன் துக்க நாட்கள் முடிந்துபோம் (ஏசா 60:20)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, உம்முடைய கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே, எனது வாழ்விலுள்ள கவலைகள், பாடுகள், வேதனைகள், உபத்திரவங்கள், போராட்டங்கள், இழப்புகள் மற்றும் குடும்ப சூழ்நிலைகளினால் மிகவும் கலங்கி துக்கத்தோடு வாழ்ந்து வரும் என்னைக் கண்ணோக்கிப் பார்த்தருளும்! என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! சந்தோஷத்தை அருளும் இயேசுவே, என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி என்னை ஆறுதல்படுத்தும்! என் கண்ணீரைத் துடைத்து, சஞ்சலத்தை நீக்கும்! ஆண்டவரே, என்னிலுள்ள சோர்வுகள், கவலைகள், சரீர பெலவீனங்களிலிருந்து எனக்கு விடுதலையைத் தந்தருளும்!

இயேசுவே, என் உள்ளத்தில் நிம்மதியையும், மன அமைதியையும் தந்தருளும்! எனது வாழ்வில் இனி உம்மையே நோக்கிப் பார்க்க கிருபை தாரும். உம்மிடத்திலிருந்து இளைப்பாறுதலைத் பெற்றுக் கொள்ள உதவியருளும்! என்னை சந்தோஷத்தி னாலும், மகிழ்ச்சியினாலும் நிரப்பும்! ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் தேற்றுகிறவரே, நீர் என்னைத் தேற்றி, என் துக்கத்தை மாற்றி, என்னைப் பெலப்படுத்தி, ஆசீர்வதியும்! என் துக்கங்கள் எல்லாம் என்னைவிட்டு நீங்கி ஆறுத லடையும்படி புதிய ஆசீர்வாதங்களைத் தந்தருளும்! எனக்குள் பழைய நினைவுகளைக் கொண்டு வந்து துக்கப்படுத்தும் பொல்லாத ஆவியை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்கிறேன்! ஆண்டவரே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி என்னை ஆசீர் வதிப்பதற்காக உமக்கு நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்

(யோவான் 16:20)

# 14
# உபத்திரவங்கள் மாற...

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமல்... அவன் கூப்பிடுகையில் கேட்டருளினார் (சங் 22:24)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் முற்றும் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! மனதுருக்கத்தில் மகத்துவமுள்ள கர்த்தரே, என் வாழ்விலிருக்கும் எல்லாவித உபத்திரவங்களையும் தயவாய் மாற்றும்படி உம்முடைய சமுகத்தில் கண்ணீரோடு வேண்டுகிறேன்! ஆண்டவரே, மிகுந்த உபத்திரவங்களினால் என்னுடைய சமாதானத்தையும், சந்தோஷத்தையும் முற்றும் இழந்து தவிக்கிற என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! சிறுமைப்பட்டவனுக்கு அடைக்கலமாயிருக்கிற இயேசுவே, என் வாழ்வில் அற்புதம் செய்தருளும்! என் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள எல்லா உபத்திரவங்களிலிருந்தும் என்னை முற்றிலுமாய் விடுவித்தருளும்.

நெருக்கப்படுகிற காலங்களில் தஞ்சமான இயேசுவே, பலவித உபத்திரவங்களினால் சிறுமைப்பட்டுள்ள என்னை கண்ணோக்கிப் பார்த்து என் சிறுமையையும், மற்றவர்களால் அற்பமாய் எண்ணப்படுவதையும் மாற்றி ஆசீர்வதித்தருளும்! உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அற்பமாயெண்ணாத அருமை இயேசுவே, எனது உபத்திரவங்களையெல்லாம் நீக்கி என்னை ஆசீர்வதித்தருளும்! என் உள்ளத்தில் காணப்படும் சஞ்சலத்தையும், கலக்கத்தையும் நீக்கி சமாதானத்தையும், மன நிம்மதியையும், அமைதியையும் தந்தருளும்! இயேசுவே, நீர் என்னோடுகூட இருந்து என்னைக் கரம்பிடித்து நடத்தும்! எனக்கு விரோதமாய் செயல்படும் சாத்தானின் கிரியைகளை இயேசுவின் நாமத்தில் முறிக்கிறேன்! என் ஜெபத்தைக் கேட்டதற்காக நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

*உபத்திரவங்களைச் சகிக்க நாம்*
*நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள்*
*அறிந்திருக்கிறீர்களே (1தெச 3:3)*

# 15

# வறுமை நிலை மாற...

கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங் 34:10)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, உம்முடைய மகிமையுள்ள கரங்களில் என்னை ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே, எனது வாழ்விலிருக்கும் வறுமை நிலைகள், தரித்தர நிலை மற்றும் கடன் சுமைகள் முற்றிலும் நீங்கும்படி ஜெபிக்கிறேன்! இயேசுவே, என்மேல் கிருபையாயிரும்! தயவாயிரும்! மன்னிப்பை அருளும் இயேசுவே, உம்முடைய வேதத்தின் ஆலோசனைகளைக் கேட்காமல் தன்னிச்சையாய் செயல்பட்டு வறுமையில் உழலும் என்னை தயவாய் மன்னித்தருளும்! நன்மையினால் நிரப்புகிற ஆண்டவரே, என்னுடைய வாழ்வில் இருக்கும் வறுமை, தரித்திரம், கடன் மற்றும் சாபங்களை முழுவதுமாக நீக்கியருளும்! எல்லாக் குறைவு களையும் நிறைவாக்கும்!

ஆண்டவரே, உம்முடைய சம்பத்தினால், செல்வத்தினால், கனத்தினால், ஐசுவரியத்தினால் மற்றும் பரிபூரணத்தினால் ஆசீர்வதியும்! என் கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதியும்! நான் கையிட்டுச் செய்கிற வேலையை, தொழிலை ஆசீர்வதியும்! ஆண்டவரே, என் வாழ்க்கையில் மேன்மையைக் கட்டளையிடும்! இழந்துபோன ஆசீர்வாதங்களை இரட்டிப்பாய் தந்து என்னை ஆசீர்வதித்து உயர்த்தியருளும்! உம்முடைய மெய்யான சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் என்னை நிரப்பும்! வறுமைக்குக் காரணமான அறியாமைளை, சாபங்களை என்னை விட்டு நீக்கியருளும்! பிசாசின் கிரியைகளைக் கடிந்து கொள்கிறேன்! இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு என் வறுமையை நீக்கி ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்.**

தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி
உங்கள் குறைவையெல்லாம்... நிறைவாக்குவார்
(பிலி 4:19)

# 16

# அடிமைத்தனங்கள் விலக

குமாரன் (இயேசுகிறிஸ்து) விடுதலையாக்கினால்
மெய்யாகவே விடுதலையாவீர்கள்
(ரோம 8:36)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இயேசுவே, உம்முடைய வல்லமையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே, பிசாசின் அடிமைத்தனத்தில் சிக்கித் தவிக்கிற என்னை விடுதலையாக்கி விடும்படி மன்றாடுகிறேன்! கட்டுண்டவர்களை விடுதலை யாக்குகிற இயேசுவே, என்மேல் கிருபையாய் இருந்து பரிபூரண விடுதலையைத் தந்தருளும்! எனக்காக இரத்தம் சிந்தின இயேசுவே, நான் செய்த என்னுடைய எல்லாப் பாவங்கள், அக்கிர மங்கள், மீறுதல்களை தயவாய் உம் இரத்தத்தி னால் கழுவி, சுத்திகரித்து என்னை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும்!

ஆண்டவரே, அடிமைத்தனத்தின் நுகத்தைச் சுமந்து நிம்மதியையும், சமாதானத்தையும் இழந்து தவிக்கிற என்னைக் கண்ணோக்கிப் பாரும்! பிசாசின் வல்லமைகளை அழித்தவரே, உமது வல்லமையுள்ள வார்த்தையை அனுப்பி என்னை விடுதலையாக்கியருளும்! என்னை அடிமைப் படுத்தி வைத்துள்ள பிசாசின் கிரியைகள் இயேசுவின் நாமத்தில் விலகுவதாக! எனக்கு எதிராக உருவாக்கப்படும் ஆயுதம் இயேசுவின் நாமத்தில் வாய்க்காமல் போவதாக! இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காகச் சிந்திய உம்முடைய இரத்தத்தினால் என்னை மறைத்தருளும்! ஆண்டவரே, உம்முடைய சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் என்னை நிரப்பி ஆசீர்வதியும். இயேசுவே, நீர் என் ஜெபத்தைக் கேட்டு அடிமைத்தனத்திலிருந்து என்னை விடுதலையாக்குவதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

*பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் (சக 4:6)*

# பிரார்த்தனை கேட்கும் இயேசு

**திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார் (சங் 102:16)**

★ என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார் (சங் 120:1)

★ நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப் பிட்டேன்; கர்த்தர் என்னைக் கேட்டருளி விசா லத்திலே வைத்தார் (சங் 118:5)

★ கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந் தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார் (சங் 40:1)

★ அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான்; நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன் (சங் 91: 15)

★ நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார் (சங் 3:4)

★ நான் கர்த்தரைத் தேடினேன்; அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார் (சங் 34:4)

★ மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார்; என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார் (சங் 66:19)

★ நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால், நான் உம்மைத் துதிப்பேன் (சங் 118:21)

★ ஸ்துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்படுவேன் (2சாமு 22:4)

★ என்னை நோக்கிக் கூப்பிடு; அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் (எரே 33:3)

# தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

**தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்... (ரோம 4:21)**

★ நான் உன்னைக் குணமாக்குவேன் (2இரா 20:5)

★ இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் (ஏசா 46:4)

★ நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது (நீதி 23:18)

★ உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன் (மீகா 7:15)

★ நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன் (ஏசா 41:10)

★ நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் (ஏசா 41:10)

★ என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசா 41:10)

★ உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன் (யாத் 23:26)

★ என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும் (யாத் 33:14)

★ நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் (ஆகாய் 2:19)

★ நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர் வதித்து, உன்னைப் பெருகவே பெருகப் பண்ணுவேன் (எபி 6:14)

★ அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள் (ஏசா 65:23)

★ உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் (உபா 28:1)

★ உன் சந்தததியை மிகவும் பெருகப்பண்ணு வேன்; அது பெருகி, எண்ணி முடியாததா யயிருக்கும் (ஆதி 13:16)

★ நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன் (யாத் 20:24)

★ அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன் (யாத் 23:25)

★ அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன் (யாத் 23:25)

★ தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் (ஏசா 44:3)

★ கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ள தாக்குவார் (ஏசா 58:11)

**தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறதே (2கொரி 1:20)**

# விசேஷித்த ஜெபக்குறிப்புகள்

**லூக்கா 11:9**

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................

★ ..............................................................................


★ ..............................................................................

## முழங்கால் யுத்தம்

ஜெபப்புத்தகங்கள் மற்றும் பிற

வெளியீடுகள் பற்றிய முழு விவரங்களை

அறிந்துகொள்ள அணுக வேண்டிய முகவரி...




**முழங்கால் யுத்தம்**

**46/AA, சாந்தி நகர் மேற்கு,**

**3வது குறுக்குத்தெரு, ஓசூர் - 635109.**

**செல்: 70944 99959/69**

email: muzhangalyuttham100@gmail.com

muzhangalyutthambookministries@gmail.com

# Muzhangal Yuttham

## PRARTHANAI NERAM

# IN GOD'S FEET

மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்;
அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும்
உம்முடைய கையில் இருக்கிறார்கள்;
அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து,
உம்முடைய வார்த்தைகளினால்
போதனையடைவார்கள். (உபா 33:3)

தேசத்தின் மறுரூப பார்வை
ஜெபத்தினால் மறுரூபம்

**MUZHANGAL YUTTHAM**
INTERCESSORY PRAYER MINISTRIES
46/AA, SHANTHI NAGAR (WEST)
HOSUR - 635 109. Tel : 70 944 999 59 / 70 944 999 6
Email : muzhangalyutthambookministries@gmail.co
muzhangalyuttham100@gmail.com